வசதி வாரியத் தலைவரிடமிருந்து கேட்கப்பட்டது. அந்தத் தலைவர் அவர்கள் 24 இடங்களை தமிழ்நாட்டிலே தேர்ந்தெடுத்து திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். அந்த 24 இடங்களில் பெரம்பலூர் ஒரு இடமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடலூருக்கு அறுவை மில்

*543 வின.—திரு. கு. அ. பொம்மன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூரில் மரம் அறுவை மில் (Saw Mill) ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினவுக்கு இடமில்லை.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, கூடலூரிலே ஏராளமாக மரம் கிடைக்கிறது. அந்த மரங்களையெல்லாம் கள்ளிக்கோட்டைக்குக் கொண்டு சென்றுதான் அறுவை செய்கிறார்கள். எனவே, கூடலூரிலேயே ஒரு மர அறுவை மில் ஏற்படுத்துவதன்மூலம் வேலைவாய்ப்புக் கொடுக்கலாம், நல்ல லாபம் கிடைக்கும். எனவே அதை ஏற்படுத்த அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அரசுத் துறை மூலமாக அறுவை மில் வைக்கப்படவில்லை. ஆங்காங்கு தனியார்கள் வைத்திருக்கிறார்கள். தனியார் துறையில் வைக்க யாராவது முன்வந்தால் அதற்கு உதவி செய்வதுபற்றி கவனிக்கப்படும்.

கரடிகுளத்திலுள்ள வனத்துறை நிலங்கள்

*544 வின.—திரு. எம். முத்தையா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தாலுக்காவைச் சார்ந்த கரடிகுளம் வன இலாகாவில் 1,000 ஏக்கர் நிலங்கள் ரொம்பவும் பயனற்று இருப்பதால் அந்த நிலங்களை ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கோவில்பட்டி தாலுக்காவைச் சார்ந்த கரடிகுளம் காட்டுப் பகுதியின் மொத்தப் பரப்பு 1,229.03 ஏக்கர். இதில் சுமார் 725 ஏக்கர் நிலத்தை, இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களின் மறுவாழ்வுக்காக, வருவாய்த் துறைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள

நிலத்தையும் காதளம்பட்டி கிராமத்தில் உள்ள 49 ஏக்கர் காட்டு நிலத்தையும் சேர்த்து மொத்தம் 553 ஏக்கர் நிலத்தை நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க 4—12—1971-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அதேமாதிரியாக பாஞ்சாலங் குறிச்சிக்குப் பக்கத்திலே ஒரு இடத்தை இலங்கையிலிருந்து வரக்கூடிய அகதி களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தும் அவர்கள் சாகுபடி செய்யாமலே விட்டுவிட்டுச் சென்றூர்கள் என்று அறிகிறேன். இப்பொழுது ஒதுக்கப்பட்ட இடம் எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? இன்னும் கொடுக்கப்படாமல் எவ்வளவு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சமீபத்திலே ஆணை பிறப்பிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். வடிவேலு: தமிழகத்திலே பயனற்று இருக்கும் வன இலாகா நிலங்கள் எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. எப்படிப் பதில் சொல்ல முடியும்?

அரசுப் போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம்

*545 வினா.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு பஸ் ஊழியர்களுக்கு எத்தனை பர்சென்ட் போனஸ் அளிக்கப்படு கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1970 அக்டோபரிலிருந்து 1971 செப்டம்பர் வரையிலான ஊதியக் கொடை (Bonus) ஆண்டில் அரசுப் போக்குவரத்துத் துறையின் பல்வேறு வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்கட்கு, அவர்களது ஒரு மாத அடிப்படைச் சம்பளத்தில் 100 சதவீதம் முதல் 250 சத வீதம் வரை ஊக்க ஊதியக் கொடை வழங்கப்பட்டது. இந்த ஊக்க ஊதியக் கொடை சிலருக்கு ரூ. 500 என்னும் வரம்புக்கும் வேறு சிலருக்கு ரூ. 625 என்னும் வரம்புக்கும் உட்பட்டு வழங்கப்பட்டது. இதைத் தவிர, தொழிலா ளர்கள் அனைவருக்கும் அவர்கள் ஊதியக் கொடை ஆண்டில் ஒழுங்காக வருகை தந்தமைக்காக, திங்களுக்கு ரூ. 7.50 வீதம் ஓர் ஆண்டிற்கு அல்லது பழைய சம்பள வீதத்தில் அரைத் திங்கள் அடிப்படைச் சம்பளம் இவற்றில் எது அதிகமோ அத்தொகை ஊதியக் கொடையாக வழங்கப்பட்டது.